**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**[https://www.evastaliniasacademy.in/](https://www.evastaliniasacademy.in/)**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# ஜூலை 14-இல் விண்ணில் பாய்கிறது சந்திரயான் – 3

**சென்னை, ஜூலை 6:** நிலவை ஆய்வு செய்யும் சந்திரயான்-3 விண்கலம், ஜிஎஸ்எல்வி மார்க்-3 ராக்கெட் மூலம் ஜூலை 14-ஆம் தேதி, பிற்பகல் 2.35 மணிக்கு விண்ணில் ஏவப்படவுள்ளது.

ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவண் ஆய்வு மையத்திலிருந்து அந்த ராக்கெட் செலுத்தப்படவுள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) நிலவை ஆய்வு செய்வதற்காக கடந்த 2008-ஆம் ஆண்டு சந்திரயான் -1 விண்கலத்தை அனுப்பியது. அந்த விண்கலம் நிலவின் மேற்பரப்பை சுற்றிவந்து ஆய்வு செய்தது. அப்போது, நிலவில் தண்ணீர் இருப்பதற்கான ஆதாரங்கள் உறுதி செய்யப்பட்டன.

அதைத் தொடர்ந்து, நிலவின் தென்துருவத்தில் தரையிறங்கி ஆய்வு செய்வதற்காக சந்திரயான் -2 விண்கலம் வடிவமைக்கப்பட்டது. இந்த விண்கலம் எல்விஎம்-3 (ஜிஎஸ்எல்வி மார்க்-3) ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து கடந்த 2019-ஆம் ஆண்டு ஜூலை 22-ஆம் தேதி விண்ணில் ஏவப்பட்டது.

பல்வேறு கட்ட பயணங்களுக்குப் பிறகு சந்திரயான்-2 அந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நிலவின் சுற்றுப் பாதையை சென்றடைந்தது. எனினும், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக திட்டமிட்டபடி லேண்டர் கலன் தரையிறங்காமல் செயலிழந்தது. அதேவேளையில், அதனுடன் அனுப்பப்பட்ட ஆர்பிட்டர் நிலவை சுற்றி வந்து ஆய்வு செய்து வருகிறது.



சந்திரயான் –3 விண்கலத்தை ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து விண்ணில் ஏவுவதற்கு தயார் நிலையில், நிறுத்திவைக்கப்பட்டுள்ள ஜிஎஸ்எல்வி மார்க் 3 ராக்கெட்.

இந்த நிலையில், சந்திரயான்-3 திட்டத்தை சுமார் ரூ.615 கோடியில் செயல்படுத்த கடந்த 2020-ஆம் ஆண்டு இஸ்ரோ முடிவு செய்தது. ஏற்கெனவே ஆர்பிட்டர் நிலவை சுற்றி வருவதால் இந்த முறை லேண்டர் மற்றும் ரோவர் கலன்களை மட்டும் அனுப்புவதற்கு திட்டமிடப்பட்டது.

அதன்படி விண்கலத்தின் தயாரிப்புப் பணிகள் முடிவடைந்து தற்போது ராக்கெட் ஏவுதலுக்கான இறுதிக் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முன்னதாக சந்திரயான் - 3 திட்டத்தை ஜூலை 13-ஆம் தேதி செயல்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில், சில தொழில்நுட்பக் காரணங்களுக்காக ஜூலை 14-ஆம் தேதி ராக்கெட்டை ஏவ முடிவு செய்யப்பட்டு, அதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

ராக்கெட் பாகங்கள் ஒருங்கிணைப்பு, விண்கலம் இணைப்பு உள்ளிட்ட நடவடிக்கைகள் மற்றும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இஸ்ரோ தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

EVA STALIN IAS

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**[https://www.evastaliniasacademy.in/](https://www.evastaliniasacademy.in/)**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# புற்றுநோய் மருந்துக்கு ஜிஎஸ்டி விலக்கு?

## ஜூலை 11–இல் கவுன்சில் முடிவு

**புது தில்லி, ஜூலை 6:** தனிநபரால் இறக்குமதி செய்யப்படும் 'டைனடக்சிமேப்' (கர்சிபா) புற்றுநோய் மருந்துக்கு சரக்கு-சேவை வரியில் (ஜிஎஸ்டி) இருந்து விலக்கு அளிப்பது தொடர்பாக வரும் 11-ஆம் தேதி நடைபெறும் ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் முடிவெடுக்கப்படவுள்ளது.

மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் ஜிஎஸ்டி கவுன்சிலின் 50-ஆவது கூட்டம் வரும் 11-ஆம் தேதி நடைபெறவுள்ளது. அதில் பல்வேறு முக்கிய விவகாரங்கள் குறித்து விவாதிக்கப்படவுள்ளது.

புற்றுநோய் சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் 'டைனடக்சிமேப்' மருந்து தனிநபரால் இறக்குமதி செய்யப்படும்போது, அதற்கு ஜிஎஸ்டி விலக்களிப்பது, மேலும் சில மருந்துகளுக்கு ஜிஎஸ்டி விலக்களிப்பது உள்ளிட்டவை தொடர்பாக ஜிஎஸ்டி கவுன்சில் விவாதிக்கவுள்ளது.

சுமார் ரூ.36 லட்சம் மதிப்பிலான 'டைனடக்சிமேப்' மருந்து மீது தற்போது 12 சதவீத ஐஜிஎஸ்டி விதிக்கப்பட்டு வருகிறது. அந்த மருந்துக்கு ஜிஎஸ்டி விலக்கு அளிப்பது நோயாளிகளுக்குப் பெரும் பலனளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

'பயன்பாட்டு வாகனங்கள்' (யுடிலிடி வெகிகிள்) என்பதற்கான விளக்கத்தை முறையாக வகுத்து, எஸ்யுவி வாகனங்களைப் போல எம்யுவி வாகனங்களுக்கும் 22 சதவீத செஸ் விதிப்பது உள்ளிட்டவை தொடர்பாகவும் ஜிஎஸ்டி கவுன்சில் விரிவாக விவாதிக்க உள்ளதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விண்வெளித் துறையில் தனியார் நிறுவனங்களின் பங்களிப்பை அதிகரிக்கும் நோக்கில், அத்தகைய நிறுவனங்களால் வழங்கப்படும் செயற்கைக்கோள் ஏவுதல் சேவைகளுக்கு ஜிஎஸ்டி-யில் இருந்து விலக்கு அளிப்பது தொடர்பாகவும் விவாதிக்கப்படவுள்ளதாகத் தெரிகிறது.

இஸ்ரோ, ஆன்ட்ரிக்ஸ், நியூ ஸ்பேஸ் இந்தியா உள்ளிட்ட பொதுத் துறை நிறுவனங்களின் சேவைகளுக்கு ஏற்கெனவே ஜிஎஸ்டி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதே வேளையில், தனியார் விண்வெளி நிறுவனங்களின் சேவைகளுக்கு 18 சதவீத ஜிஎஸ்டி விதிக்கப்பட்டு வருகிறது.

ஜிஎஸ்டி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தை அமைப்பது தொடர்பாகவும் ஜிஎஸ்டி கவுன்சில் ஆராயவுள்ளது.

## இணையவழி விளையாட்டு: 28% ஜிஎஸ்டிக்கு பரிந்துரை

இணையவழி விளையாட்டுகள், குதிரைப் பந்தயங்கள், கேசினோ விளையாட்டுகள் ஆகியவற்றுக்கு 28 சதவீத சரக்கு–சேவை வரி (ஜிஎஸ்டி) விதிப்பதற்கு மாநில நிதியமைச்சர்களைக் கொண்ட குழு மீண்டும் பரிந்துரைத்துள்ளது.

குழுவில் இடம்பெற்றிருந்த கோவா, 28 சதவீதத்துக்குப் பதிலாக 18 சதவீத ஜிஎஸ்டி விதிக்க வலியுறுத்தியதால், இந்த விவகாரத்தில் ஒருமித்த கருத்து எட்டப்படாமல் பெரும்பான்மை அடிப்படையில் இந்தப் பரிந்துரை அளிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு ஜூன் மாதமே இந்த விவகாரம் தொடர்பான அறிக்கையை அக்குழு ஜிஎஸ்டி கவுன்சிலிடம் தாக்கல் செய்திருந்தது.

எனினும், அதில் இடம்பெற்றிருந்த சில விவகாரங்களுக்கு கோவா எதிர்ப்பு தெரிவித்தது.

இது தொடர்பான இறுதி முடிவு எடுப்பதற்கான பொறுப்பை ஜிஎஸ்டி கவுன்சிலிடமே மாநில நிதியமைச்சர்கள் குழு ஒப்படைத்துள்ளது.

EVA STALIN

# 4.80 லட்சம் பேருக்கு அடிப்படை எழுத்தறிவுக் கல்வி வழங்க இலக்கு

## செப்டம்பர் முதல் வகுப்புகள்

**சென்னை, ஜூலை 6:** புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம் மூலம் நிகழாண்டு தமிழகத்தில் 4.80 லட்சம் பேருக்கு அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு கல்வி வழங்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்துக்காக 38 மாவட்டங்களிலும் கற்போர் எழுத்தறிவு மையங்கள் ஏற்படுத்தப்பட்டு செப்டம்பர் முதல் வகுப்புகள் நடைபெறவுள்ளதாக பள்ளிக் கல்வித் துறை தெரிவித்துள்ளது.

இது குறித்து பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம் சார்பில் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கை:

தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையத்தின் கீழ் பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம் வாயிலாக முற்றிலும் தன்னார்வ முறையில் செயல்படுத்தப்படும் 'புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம் 2022-2027' என்ற புதிய ஐந்தாண்டு வயது வந்தோர் கல்வித் திட்டத்தை அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தத் திட்டமிட்டு அதற்கான வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டன.

இதனடிப்படையில் 2022-2023-ஆம் ஆண்டு இந்தத் திட்டம் 38 மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு 5 லட்சத்து 28 ஆயிரத்து 416 பேருக்கு அடிப்படை எழுத்தறிவுக் கல்வி வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக நிகழ் நிதியாண்டில் (2023-2024) அனைத்து மாவட்டங்களிலும் முற்றிலும் எழுதப்படிக்கத் தெரியாத 15 வயதுக்கு மேற்பட்ட 4 லட்சத்து 80 ஆயிரம் நபர்களுக்கு அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுக் கல்வியை வழங்கிடும் வகையில் புதிய பாரத எழுத்தறிவுத் திட்டத்தை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் வரும் செப்டம்பர் மாதம் தொடங்கி 2024 பிப்ரவரி மாதம் வரை ஆறு மாதங்களுக்கு நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.

ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரம் வீதம் 6 மாதங்களுக்கு 200 மணி நேரம் இந்தத்திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும்.

இதில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டாரக் கல்வி அலுவலர்கள், ஆசிரியர் பயிற்றுநர்கள், தலைமை ஆசிரியர்களால் கண்டறியப்படும் பள்ளிகளில், மையங்களில் குறிப்பாக கற்போருக்கான நேரங்களில் செயல்படுத்தப்பட வேண்டும்.

இந்தத் திட்டத்தின் கீழ் நகர்ப்புற, கிராமப்புற பகுதிகளில் வசிக்கும் 15 வயதுக்கும் மேற்பட்ட முற்றிலும்எழுதப்படிக்கத் தெரியாதோரை கண்டறிதல் உள்ளிட்ட பணிகளை ஜூலை மூன்றாவது வாரத்துக்குள் முடிக்கப்படுதல் வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நீர்நிலை விவரங்களை எண்மமயமாக்க அரசு உத்தரவு

**சென்னை, ஜூலை 6:** நீர்நிலை விவரங்களை எண்மமயமாக்க வேண்டும் என அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட வழிகாட்டுதலில் உத்தரவிடப்பட்டுள்ளது.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டமானது, இரண்டாவது கட்டமாக நிகழ் நிதியாண்டில் செயல்டுத்தப்பட உள்ளது. இதற்கான வழிகாட்டுதல்களை தமிழக அரசு வெளியிட்டுள்ளது. அதன் விவரம்:

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் குறைந்தபட்ச அடிப்படை நிதியாக தலா ரூ.30 லட்சம் வழங்கப்படுகிறது. மேலும், செயல்திறன் ஊக்க நிதியாக ரூ.5 லட்சம் அளிக்கப்படுகிறது. இதுதவிர, நிர்வாகச் செலவுகள், தகவல், கல்வி, தொடர்பு, ஆவணப்படுத்துதல் மற்றும் திறன் வளர்ப்பு ஆகியவற்றுக்காக 2 சதவீத நிதி செலவிடப்படுகிறது. நிகழ் நிதியாண்டில் மொத்தமுள்ள கிராம ஊராட்சிகளில் 2,504 கிராம ஊராட்சிகளில் மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**புனரமைப்பு-மேம்பாடு:** அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ், நீர்நிலைகள் புனரமைத்தல், குக்கிராமங்களில் தெருக்கள், வீதிகள் அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல், சமத்துவ சுடுகாடு, இடுகாடு எனப் பரிந்துரைக்கப்பட்ட இடங்கள், பள்ளிகளின் உட்கட்டமைப்பு, பசுமை மற்றும் சுத்தமான கிராமம், வாழ்வாதாரம் மற்றும் சந்தைப்படுத்துதல் ஆகியவற்றுக்கான வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட உள்ளன.

குறிப்பாக, குளங்கள், ஊருணிகளைத் தூர்வாருதல் போன்ற பணிகளை எடுக்கலாம். ஊர் மக்களால் பிரதானமாகப் பயன்படுத்தப்படும் குளங்கள், ஊருணிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். தனியாருக்குச் சொந்தமானவற்றில் பணிகளை மேற்கொள்ளக் கூடாது.

குக்கிராமத்துக்கு வெளியேயுள்ள குளங்கள், ஊருணிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்த விவரங்கள் அடங்கிய பெயர்ப் பலகையை ஒவ்வொரு பணியிடத்திலும் வைக்க வேண்டும்.

ஊராட்சி ஒன்றியம், கிராம ஊராட்சிகளின் சொந்தக் கட்டடங்கள், சமுதாய அமைப்புகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்த வேண்டும். நீர்நிலைகள், அவற்றின் வரத்து மற்றும் போக்கு கால்வாய் ஆகியவற்றின் விவரங்களை வருவாய்த் துறையிடம் உள்ள ஆவணங்கள் அடிப்படையில் எண்மமயமாக்க வேண்டும்.

**பேருந்து நிலையங்கள்:** பேருந்து நிலையங்களுக்குத் தேவையான மேற்கூரை, இருக்கை வசதிகள், மின்னனு தகவல் பலகை, விளக்குகள், புதிய கடைகள், குடிநீர்வசதி, கழிவறை ஆகிய பணிகளை அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளலாம். ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் தேவைக்கேற்ப பள்ளிக் கட்டடங்கள் எடுக்கலாம். கட்டடமே இல்லாத பள்ளிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

நகர்ப்புற மற்றும் தொழில் பகுதிகளுக்கு அருகிலுள்ள கிராம ஊராட்சிகள் மக்கள் நெருக்கம் மிகுந்ததாகவும், சுடுகாடு, இடுகாடு அமைக்கத் தேவையான நிலங்கள் இல்லாததாகவும் உள்ளன. எனவே, நகர்ப்புறங்களை ஒட்டியுள்ள ஊராட்சிகளில் எரிவாயு சுடுகாடு அமைக்கலாம். ஏற்கெனவே, எரிவாயு சுடுகாடு 10 கிலோ மீட்டர் சுற்றளவில் அமைந்திருந்தால் புதிதாக அமைக்கக் கூடாது என்று வழிகாட்டு நெறிமுறையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மகளிருக்கு ரூ.1,000: சிறப்பு முகாம்கள் மூலம் பயனாளிகள் தேர்வு

## பணிகளைத் தொடங்குகிறது தமிழக அரசு

கே.பாலசுப்பிரமணியன்

**சென்னை, ஜூலை 6:** மகளிருக்கு ரூ.1,000 உரிமைத் தொகை வழங்கும் திட்டத்துக்கான பயனாளிகளை சிறப்பு முகாம்களின் மூலம் தேர்வு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

பயனாளிகளிடம் இருந்து போதுமான ஆவணங்கள், தகவல்கள் ஆகியவையும் முகாம்களின் போதே திரட்டப்பட உள்ளன. இந்தப் பணிகளை ஆகஸ்ட் மாதத்துக்குள் முடிக்கவும் மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1,000 உரிமைத் தொகை வழங்கும் திட்டம், நிகழ் நிதியாண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பாக வெளியிடப்பட்டுள்ளது. மேலும், இந்தத் திட்டம் குறித்து சட்டப்பேரவையில் விளக்கம் அளித்த முதல்வர் மு.க.ஸ்டாலின், குடும்பத் தலைவிகள் அனைவருக்கும் அவரவர் வங்கிக் கணக்கில் தொகை நேரடியாகச் செலுத்தப்படும் எனவும், நடைபாதையில் வணிகம் செய்வோர், மீனவ மகளிர், கட்டுமானத் தொழில் பணிபுரியும் மகளிர், சிறிய கடைகள், வணிகம் மற்றும் சிறுதொழில் நிறுவனங்களில் மிகக் குறைந்த ஊதியம் பெறுவோர், ஒரே நாளில் ஒன்றுக்கு மேற்பட்ட இல்லங்களில் பணிபுரியக்கூடிய பெண்கள் ஆகியோருக்கு உதவித் தொகை அளிக்கப்படும் எனவும் அறிவித்துள்ளார். உரிமைத் தொகையை சுமார் ஒரு கோடி மகளிருக்கு வழங்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

**சிறப்பு முகாம்களுக்கு ஏற்பாடு:** ரூ.1,000 உரிமைத் தொகையை யாருக்கெல்லாம் வழங்குவது, எப்படி கணக்கெடுப்பு நடத்துவது என்பன குறித்த வழிகாட்டி நெறிமுறைகள் தயாரிக்கும் பணி இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. இந்தத் திட்டத்துக்கான சிறப்புப் பணி அதிகாரியாக இளம் பகவத் ஏற்கெனவே நியமிக்கப்பட்டுள்ளார்.

உரிமைத் தொகையைப் பெற யாரெல்லாம் தகுதியான மகளிர் என்பதை அடையாளம் காணவும், அவர்கள் குறித்த விவரங்களைச் சேகரிக்கவும் தமிழக அரசு பணிகளைத் தொடங்கவுள்ளது. இதற்காக மாநிலம் முழுவதும் சிறப்பு முகாம்களை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்த முகாம்களை மாநிலத்தில் உள்ள அனைத்து நியாயவிலைக் கடைகளுக்கு அருகிலேயே அமைத்திடவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் வருவாய்த் துறை அலுவலர்களைக் கொண்டு சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளன. இந்த முகாம்களுக்கான ஏற்பாடுகளை மாநகராட்சி, நகராட்சி போன்ற உள்ளாட்சி அமைப்புகள் செய்து தர வேண்டுமென தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்த முகாம்களின் மூலம், பெண்களிடம் இருந்து உரிய தகவல்கள் கேட்டுப் பெறப்பட உள்ளன. குறிப்பாக, எந்த வகை குடும்ப அட்டை வைத்துள்ளனர், ஆதார் எண், குடும்ப உறுப்பினர்களின் தொழில் உள்ளிட்ட அடிப்படை விவரங்கள், வங்கிக் கணக்கு எண் போன்ற கோரப்பட உள்ளன.

இதுகுறித்து, தமிழக அரசுத் துறை வட்டாரங்கள் கூறியதாவது:

மகளிர் உரிமைத் தொகைக்கான விவரங்களைப் பெற ஒட்டுமொத்தமாக ஓரிடத்தை நிர்ணயித்தால் விவரங்கள் பெறுவதில் சிக்கல் ஏற்படும். இதனால், நியாயவிலைக் கடைகளில் மக்கள் பொருள்கள் வாங்க வருவது போன்று வந்து விவரங்களைத் தந்தால் எளிதாக இருக்கும் என முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனால், ஒவ்வொரு நியாய விலைக் கடைக்கும் அருகிலேயே சிறப்பு முகாம்கள் அமைக்கப்பட உள்ளன.

மக்கள் தாங்கள் பொருள்கள் வாங்கும் நியாய விலைக் கடைக்கு அருகில் அமைக்கப்படும் முகாமுக்கு சென்று விவரங்களை அளிக்கலாம். நீண்ட வரிசை ஏற்படும் நிலையில், அவர்களுக்கான குடிநீர் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து தர உள்ளாட்சி அமைப்புகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

விரிவான வழிகாட்டு நெறிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு, சிறப்பு முகாம்களில் விவரங்கள் பெறப்படும் என அரசுத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த முகாம்களை அடுத்த வாரத்தில் இருந்து தொடங்க முடிவு செய்திருப்பதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

## ஆட்சியர்களுடன் முதல்வர் இன்று ஆலோசனை

மகளிர் உரிமைத் தொகை திட்டம் தொடர்பாக அனைத்து மாவட்ட ஆட்சியர்களுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் வெள்ளிக்கிழமை (ஜூலை 7) ஆலோசனை நடத்தவுள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் அனைத்து ஆட்சியர்களும் பங்கேற்க வேண்டுமென தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா உத்தரவிட்டுள்ளார்.

ஆட்சியர்களுக்கு அவர் அனுப்பியுள்ள கடிதம்: மகளிர் உரிமைத் தொகை திட்டம் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் ஆட்சியர்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும். மேலும், மாவட்டத்தைச் சேர்ந்த முக்கிய அதிகாரிகள் அந்தந்த மாவட்டங்களில் உள்ள தேசிய தகவலியல் மையத்தின் காணொலி அறையில் இருந்து கூட்டத்தில் பங்கேற்க வேண்டும்.

குறிப்பாக, மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள், கூடுதல் ஆட்சியர்கள், சார் ஆட்சியர்கள், அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சி ஆணையர்கள், கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர்கள், ஊராட்சித் துறை கூடுதல் இயக்குநர், மகளிர் உரிமைத் தொகை திட்ட இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், முன்னணி வங்கி மேலாளர்கள், மக்கள் தொடர்பு அலுவலர்கள் ஆகியோர் காணொலி மூலம் கூட்டத்தில் பங்கேற்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

EVA STALIN IAS ACADEMY

# உடனடித் தேவை!

மத்திய அமைச்சரவை கடந்த வாரம் தேசிய ஆராய்ச்சி அமைப்பை நிறுவ முடிவு செய்து அதற்கு ரூ. 50,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது. இந்த அமைப்பு அடுத்த ஐந்து ஆண்டு காலம் அறிவியல் ஆராய்ச்சிகளுக்கு வழிகாட்டுதல்களை வழங்கும் உயர்நிலை அமைப்பாகச் செயல்படும். இந்த அமைப்பின் மூலம் ஆராய்ச்சிகளை முனைப்புடன் முன்னெடுக்க இந்திய அரசு வழிகோலும்.

சொல்லப்போனால், இந்த முடிவு மிகவும் தாமதமாக எடுக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் உள்ள பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சி என்கிற பெயரில் முனைவர் பட்டங்கள் வழங்கப்படுகின்றனவே தவிர, குறிப்பிடும்படியான எந்தவிதமான கண்டுபிடிப்பும் இதுவரை செய்யப்படவில்லை. 1930-இல் இயற்பியலுக்கான நோபல் விருதை இந்தியாவில் மேற்கொண்ட ஆராய்ச்சிக்காக டாக்டர் சி.வி. ராமன் பெற்றதற்குப் பிறகு, கடந்த 93 ஆண்டுகளில் சர்வதேச அளவில் எந்தவொரு வெற்றிகரமான ஆராய்ச்சியும் இந்தியாவில் செய்யப்படவில்லை என்பது வேதனைக்குரிய உண்மை.

இந்தியாவில் ஆராய்ச்சிக்கான கட்டமைப்பு, அறிவியலானாலும், தொழில்நுட்பமானாலும் வேறு எந்தத் துறையானாலும் மிகமிக மோசமான நிலையில் இருக்கிறது. இந்தியாவின் மக்கள்தொகைக்கும் திறமைசாலிகளின் எண்ணிக்கைக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் ஏற்ப ஆராய்ச்சிக்கான கட்டமைப்பு உயரவே இல்லை.

உலகளாவிய நிலையில் பார்த்தால், இந்திய பல்கலைக்கழகங்களின் தரம் குறிப்பிடும்படியாக இல்லை. அந்தப் பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளின் தரமும் எண்ணிக்கையும்கூட சொல்லிக்கொள்ளும்படியாக இல்லை.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது தனித்துவமான கண்டுபிடிப்புகளிலும், காப்புரிமை பெற்றிருப்பதிலும் நாம் மிகவும் பின்தங்கியிருக்கிறோம். அதற்கு, ஆராய்ச்சிக்காக நாம் செய்யும் மிகக் குறைந்த அளவிலான நிதி ஒதுக்கீடு முக்கியமான காரணம்.

வளர்ச்சி அடைந்த நாடுகளில் உள்ள தனியார் நிறுவனங்கள் ஆராய்ச்சிக்காக செலவிடும் நிதி ஒதுக்கீட்டின் அளவுக்குக்கூட இந்தியாவின் மொத்த ஒதுக்கீடு இல்லை. சீனா தனது ஜிடிபி-யில் 2.6% ஆராய்ச்சிக்காகவும், கண்டுபிடிப்புகளுக்காகவும் ஒதுக்குகிறது. அதை 7%-ஆக அதிகரிக்க இலக்கு நிர்ணயித்திருக்கிறது. அதே நேரத்தில், நமது குறைந்த அளவு ஜிடிபி-யில் 0.66% மட்டுமே ஆராய்ச்சிக்கும், கண்டுபிடிப்புக்கும் ஒதுக்கப்படுகிறது என்றால், அதன் மதிப்பு எத்தகையது என்பதைக் கணக்கிட்டுக் கொள்ளலாம்.

இந்தியாவின் ஆராய்ச்சிக்கான நிதி ஒதுக்கீட்டை ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது, நாம் எந்த அளவுக்கு பின்தங்கியிருக்கிறோம் என்பது வெளிப்படுகிறது. தென்கொரியாவின் ஒதுக்கீடு 5%. அதில் ஐந்தில் நான்கு பங்கு தனியார் துறையின் பங்களிப்பு. எடுத்துக்காட்டாக சாம்சங் நிறுவனத்தின் ஆராய்ச்சிக்கான ஒதுக்கீடு இந்தியாவின் ஆராய்ச்சிக்கான மொத்த வருடாந்திர ஒதுக்கீட்டைவிட அதிகம். இதிலிருந்து தேசிய ஆராய்ச்சி அமைப்பின் தேவையை நாம் உணர முடிகிறது.

பெரும்பாலான வளர்ச்சி அடைந்த நாடுகளில் தனியார் துறைகள்தான் ஆராய்ச்சிகளை முன்னெடுத்து அதன் மூலம் தங்களுக்கான காப்புரிமையை உறுதி செய்து கொள்கின்றன. வளர்ச்சி அடைந்த நாடுகளில் தொழில்துறைக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் இடையே நெருக்கமான தொடர்பு மேற்கொள்ளப்படுகிறது. அதன் மூலம் புதிய ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அந்த ஆராய்ச்சிகளுக்கான முதலீட்டை தனியார் நிறுவனங்கள் ஏற்றுக்கொள்கின்றன.

கல்வித்துறைக்கும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் இடையேயான ஒருங்கிணைப்பின் மூலம் புதிய கண்டுபிடிப்புகளும் அவற்றுக்கான காப்புரிமையும் வளர்ச்சி அடைந்த நாடுகளில் பெறப்படுகின்றன. மத்திய அரசின் 'புதிய கல்விக் கொள்கை 2020' இதை வலியுறுத்துகிறது. தேசிய ஆராய்ச்சி அமைப்பின் நோக்கங்களில் இதுவும் ஒன்று.

ஐந்து ஆண்டுக்கான ரூ. 50,000 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் அமைக்கப்பட்டிருக்கும் தேசிய ஆராய்ச்சி அமைப்பின் தலைவராக பிரதமர் செயல்படுவார் என்பது மிக முக்கியமான செய்தி. இந்த முயற்சியின் முக்கியத்துவத்தை பிரதமரின் நேரடி ஈடுபாடு உணர்த்துகிறது. ஆராய்ச்சிகளில் அரசும் தனியார் நிறுவனங்களும் இணைந்து செயல்படுவதில் பிரச்னைகள் ஏற்படாமல் இருப்பதை பிரதமரின் தலைமையில் அமையும் குழு உறுதிப்படுத்தும்.

இந்தியாவைப் பொறுத்தவரை நமது ஆராய்ச்சிகளில் அரசின் பங்களிப்பு 56%. தனியார் துறையின் பங்களிப்பு 35% மட்டுமே. அதே நேரத்தில், தொழில்நுட்பத்தில் முன்னேறிய நாடுகளில் நிலைமை தலைகீழானது. அங்கே ஆராய்ச்சிகளிலும் கண்டுபிடிப்புகளிலும் தனியார் துறையின் பங்களிப்புதான் அதிகம்.

ஒரு பொருளாதாரத்தின் வளர்ச்சியை உறுதிப்படுத்த அடிப்படையாக இருப்பவை அறிவியல் ஆராய்ச்சியும் கண்டுபிடிப்புகளும்தான். மெக்ஸிகோவை எடுத்துக்கொண்டால் பல ஆண்டுகளாக அறிவியல் ஆய்வுகளுக்கான ஒதுக்கீட்டில் தேக்கம் காணப்படுகிறது. அதைச் சார்ந்து மெக்ஸிகோவின் தனிநபர் வருமான வளர்ச்சியும் தேக்கமடைந்திருக்கிறது. இன்னொருபுறம் தென்கொரியா, தைவான், இஸ்ரேல் போன்ற நாடுகளில் கடந்த 40 ஆண்டுகளாக ஆராய்ச்சிகளில் தனியார் துறை பெரும்பங்கு வகிக்கிறது. அதனால்தான் அந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சியும் தொழில்நுட்ப வளர்ச்சியும் குறிப்பிடும்படியாக இருக்கின்றன.

அறிவியல் ஆராய்ச்சியிலும் புதிய கண்டுபிடிப்புகளிலும் இந்தியா மிக முக்கியமான கட்டத்தில் இருக்கிறது. விவசாயம், சுற்றுச்சூழல், தொழில்துறை உற்பத்தி என்று இந்தியாவுக்கான அறிவியல் ஆய்வுகளும், தொழில்நுட்ப மேம்பாடும் எண்ணிலடங்காதவை. அவற்றை எதிர்கொள்ள எடுக்கப்பட்டிருக்கும் தேசிய ஆராய்ச்சி அமைப்பு என்கிற நரேந்திர மோடி அரசின் முடிவு வரவேற்புக்குரியது.

EVA STALIN IAS ACADEMY

# கடத்தப்படும் குடிமைப் பொருள்கள்

**ஐ.வி. நாகராஜன்**

மக்களுக்கு நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்கள் கடத்தப்படுவது, கள்ளச் சந்தையில் விற்பனை செய்யப்படுவது - இவை காலங்காலமாக நடந்து கொண்டிருக்கிறது. ஒரு சில ரேஷன் கடை ஊழியர்கள், உள்ளூர் தாதாக்கள், ஆளும் கட்சியின் கீழ்மட்ட நிர்வாகிகள் என பலரும் இந்த செயல்களில் ஈடுபடுகின்றனர். ஆனால் இவர்களில் எவரும், கடத்தல் சம்பவங்களில் கைதாவதில்லை.

மக்களுக்கு இலவசமாகவும், மானிய விலையிலும் வழங்கப்படும் அரிசி, பருப்பு, எண்ணெய் போன்றவை சம்பந்தப்பட்ட நுகர்வோருக்கு நேரடியாக சென்று சேராமல், கள்ளச் சந்தைக்கு கடத்தப்படுவதை கண்காணித்து, வழக்குகள் பதிவு செய்ய, 'சிவில் சப்ளைஸ் சிஐடி' என்ற ஒரு பிரிவு தமிழக காவல்துறையில் இயங்கி வருகிறது.

முந்தைய அதிமுக ஆட்சியில், கூடுதல் டிஜிபி ராதாகிருஷ்ணன், சிவில் சப்ளைஸ் சிஐடி பிரிவுக்கு நியமிக்கப்பட்டபோது, ரேஷன் பொருட்கள் கடத்தலை தடுக்க கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டார். பலர் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டனர். அவருக்கு பிறகு சிவில் சப்ளைஸ் சிஐடி பிரிவின் பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளது.

சிவில் சப்ளைஸ் சிஐடி பிரிவினர் நடத்திய தொடர் நடவடிக்கைகள் காரணமாக கடந்த ஜனவரி, பிப்ரவரி இரு மாதத்தில் ரூ.35 லட்சம் மதிப்புள்ள 1.7 லட்சம் கிலோ அரிசி, பாமாயில், பருப்பு, மண்ணெண்ணெய் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டுஉள்ளன. மார்ச் மாதத்தில் ரூ.1.06 கோடி மதிப்புள்ள 3 ஆயிரத்து 350 குவிண்டால் ரேஷன் அரிசி உட்பட பருப்பு, பாமாயில், எண்ணெய் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பாக 545 பேர் கைது செய்யப்பட்டனர். 124 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

ஏப்ரல் மாதத்தில் ரூ.23.61 லட்சம் மதிப்பிலான 3 ஆயிரத்து 293 குவிண்டால் அரிசி மற்றும் பருப்பு, எண்ணெய் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. 529 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த மே மாதத்தில் ரூ.18.41 லட்சம் மதிப்புள்ள 2 ஆயிரத்து 447 குவிண்டால் அரிசி, பருப்பு, எண்ணெய் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட 150 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. 561 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆந்திரத்திற்கு கடத்தி செல்ல இருந்த 200 மூட்டை ரேஷன் அரிசி, கடந்த மே மாதம் 13-ஆம் தேதி பொன்னேரி அருகே பறிமுதல் செய்யப்பட்டது. இவை அரசின் சமீபத்திய புள்ளிவிவரம். இப்படி ரேஷன் அரிசி, பருப்பு, எண்ணெய் கடத்தல் என்பது தொடர்கதையாக உள்ளது. இதற்கு ஒரே தீர்வு, கடத்தலுக்கு உடந்தையாக உள்ளவர்கள் கைது செய்யப்படுவதுதான்.

தமிழ்நாடு குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு துறைத் தலைவர் காமினி உத்தரவின்பேரில் அத்தியாவசிய உணவுப் பண்டங்கள் கடத்தல், பதுக்கல் ஆகிய குற்றங்களை தடுக்கும் பொருட்டு தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில், திருச்சி மண்டல குடிமை பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத்துறை கண்காணிப்பாளர் உத்தரவின் பேரில் காவல் ஆய்வாளர், உதவி ஆய்வாளர், காவலர்கள் தீவிர கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

வேலூர் மாவட்ட பறக்கும் படை வட்டாட்சியர், பேரணாம்பட்டு அருகே உள்ள தமிழக எல்லையான பத்தலப்பள்ளி சோதனை சாவடி வழியாக ஆந்திர, கர்நாடகமாநிலங்களுக்கு ரேஷன் அரிசி கடத்தப்படுவதாக ரகசிய தகவல் கிடைத்ததன்பேரில் அப்பகுதியில் பறக்கும் படை வட்டாட்சியர் தலைமையில் அதிகாரிகள் குழுவினர் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அந்த நேரத்தில் வேலூரிலிருந்து கர்நாடக மாநிலம் நோக்கி சென்ற கர்நாடக மாநில பேருந்தைச் சோதனையிட்டனர். சோதனையில் நூதன முறையில் வெளி மார்க்கெட் அரிசி பைகள் போன்று தைக்கப்பட்டிருந்த 15 மூட்டைகள், மற்றும் பிளாஸ்டிக் பைகளில் 8 மூட்டைகள் என மொத்தம் 555 கிலோ எடை கொண்ட 23 ரேஷன் அரிசி மூட்டைகள் கர்நாடக மாநிலத்திற்குக் கடத்த முயன்றது தெரிய வந்தது.

பறக்கும் படையினர் ரேஷன் அரிசி மூட்டைகளைப் பறிமுதல் செய்தனர். இதன்மதிப்பு ரூ 5 ஆயிரத்து 550 ஆகும். இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்ட ரேஷன் அரிசி மூட்டைகளை குடியாத்தம் நுகர் பொருள் வாணிப கிடங்கில் ஒப்படைத்தனர். பறக்கும் படையினர் இது தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

அண்மையில் கந்தர்வகோட்டை பகுதியில் ரேஷன் அரிசி கடத்தப்படுவதாக போலீசாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில், அப்பகுதி போலீஸ் இன்ஸ்பெக்டர் தலைமையிலான போலீசார் கந்தர்வகோட்டை -பட்டுக்கோட்டை நெடுஞ்சாலையில் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது அந்த வழியாக வந்த ஒரு சரக்கு வேனை நிறுத்தி சோதனை செய்தனர். சோதனையில் சரக்கு வேனில் 500 கிலோ ரேஷன் அரிசி கடத்தி வந்தது மட்டங்கால் கிராமத்தை சேர்ந்த சிலர் என்பது தெரிய வந்தது. இதையடுத்து அவர்களை போலீசார் கைது செய்து, சரக்கு வேனுடன் 500 கிலோ ரேஷன் அரிசியையும் பறிமுதல் செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ரேஷன் விநியோக முறைகேடுகளை தடுக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுப்பதாக கூறி வந்தாலும் ரேஷன் அரிசி விநியோக மையங்களிலிருந்து கடத்தப்படுவது தொடர்கிறது. கண்காணிப்பு அதிகாரிகள் தரப்பில் பொதுமக்களிடமிருந்து ரேஷன் அரிசி சேகரிக்கப்பட்டு கடத்தப்படுவதாக கூறப்பட்டாலும் மொத்தமாக விநியோக மையங்களில் இருந்து கடத்தப்படுவது தான் அதிக அளவில் ரேஷன் அரிசி கடத்தலுக்கு வழிவகுக்கிறது என சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

எது எப்படி ஆயினும் பொதுமக்கள் நலனுக்காக மத்திய, மாநில அரசுகள் ரேஷன் கடைகள் மூலம் அத்தியாவசிய பொருள்களை விநியோகிக்கும் நிலையில், அதனை முறைகேடாகக் கடத்தி அதிக விலைக்கு வெளிச்சந்தையில் விற்கும் நடைமுறையை தடுத்து நிறுத்திட மாநில அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசர அவசியம்.

# தான்சானியாவில் சென்னை ஐஐடி-யின் முதல் வளாகம்

**ஜான்ஜிபார் சிட்டி, ஜூலை 6:** தான்சானியாவில் சென்னை ஐஐடி வளாகத்தைத் தொடங்க இந்தியா திட்டமிட்டுள்ளதாகவும், வரும் அக்டோபர் முதல் அந்த வளாகத்தில் படிப்புகள் தொடங்கப்படும் எனவும் வெளியுறவுத் துறை அமைச்சகம் சார்பில் வியாழக்கிழமை தெரிவிக்கப்பட்டது.

'தெற்குலகுக்கான இந்தியாவின் பொறுப்புணர்வை பிரதிபலிக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கை' என்று இந்தியாவின் இந்த முயற்சியை தான்சானியாவில் தற்போது சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் விவரித்துள்ளார்.

இது குறித்து வெளியுறவு அமைச்சகம் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

வளர்ந்து வரும் சர்வதேச தேவைகளுக்கு ஏற்ப திறன்களை மேம்படுத்திக்கொள்ள உதவியாக, உலகத் தரத்திலான உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் விதமாக தான்சானியாவின் ஜான்ஜிபாரில் சென்னை ஐஐடி-யின் வளாகத்தைத் தொடங்க, அந்த நாட்டுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஜான்ஜிபார் சிட்டியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அதன் அதிபர் ஹுசைன் அலி வைனி, வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோர் முன்னிலையில் இந்திய கல்வி அமைச்சகம், சென்னை ஐஐடி மற்றும் ஜான்ஜிபார் கல்வி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சகம் ஆகியோரிடையே இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமானது.

வெளிநாட்டில் அமையும் முதல் ஐஐடி வாளாகம் இதுவாகும். இது இரு நாடுகளிடையேயான நீண்டகால நட்புறவை பிரதிபலிக்கும் வகையிலும் திகழும்.

உயர் தரமான கல்வி மற்றும் ஆராய்ச்சியை மேற்கொள்ளும் இந்திய பல்கலைக்கழகங்கள், வெளிநாடுகளில் வளாகங்களைத் தொடங்க ஊக்குவிக்கப்படும் என்று தேசிய கல்விக் கொள்கை 2020-இல் பரிந்துரைக்கப்பட்டது. அதனடிப்படையிலேயே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஜான்ஜிபாரில் அமைக்கப்படும் சென்னை ஐஐடி வளாகத்தில் வரும் அக்டோபர் முதல் படிப்புகள் தொடங்கப்படும். மாணவர் சேர்க்கை, பாடத்திட்டம் உள்ளிட்ட நடைமுறைகளை சென்னை ஐஐடி மேற்கொள்ளும். மூலதனம் மற்றும் செலவினங்களை ஜான்ஜிபார் அரசு ஏற்றுக்கொள்ளும்.



வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், ஜான்ஜிபார் அதிபர் வைனி முன்னிலையில் ஒப்பந்தங்களைப் பரிமாறிக் கொண்ட அதிகாரிகள்.

இந்த வளாகத்தில் கலப்புத் துறை சார்ந்த படிப்புகளும் அறிமுகப்படுத்தப்படும். இதில் சேர இந்திய மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

இங்கு படிப்பை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு சென்னை ஐஐடி-யின் பட்டச் சான்றிதழ் வழங்கப்படும் என்று வெளியுறவு அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

**ஐஎன்எஸ் திரிசூல் போர்க் கப்பலில் வரவேற்பு:** தான்சானியா சென்றுள்ள இந்தியாவின் 'ஐஎன்எஸ் திரிசூல்' போர்க் கப்பலில் ஜான்ஜிபார் அதிபர் ஹுசைன் அலி வைனியுடன் இணைந்து இந்திய கடற்படை வீரர்களின் வரவேற்பை ஏற்றுக்கொண்ட வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், 'இந்த போர்க் கப்பல் இங்கு வந்திருப்பது, இந்தப் பிராந்தியத்தில் அமைதி மற்றும் வளர்ச்சியை உறுதிப்படுத்தும் இந்தியாவின் பொறுப்புணர்வின் அடையாளம்' என்றார்.

இந்தியாவின் அதிநவீன போர்க் கப்பலான திரிசூல் தான்சானியா சென்றுள்ள நிலையில், வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரும் இரண்டு நாள் பயணமாக அந்த நாட்டுக்குச் சென்றுள்ளார். தான்சானியாவின் தன்னாட்சி பெற்ற பிராந்தியமான ஜான்ஜிபார் சென்ற அவர், அதன் அதிபர் ஹுசைன் அலி வைனியை சந்தித்து பாதுகாப்பு ஒத்துழைப்பு உள்பட இருதரப்பு உறவை வலுப்படுத்துவது குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

பின்னர் அவருடன் இணைந்து, திரிசூல் போர்க் கப்பலைச் சுற்றிப் பார்த்த ஜெய்சங்கர், வீரர்களின் வரவேற்பை ஏற்றுக்கொண்டார்.

திரிசூல் போர்க் கப்பலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய ஜெய்சங்கர், 'இந்தியாவின் மேற்கு கடற்கரைக்கும் ஆப்பிரிக்காவின் கிழக்கு கடற்கரைக்கும் இடையேயான தொடர்பு மிகுந்த வரலாற்றுச் சிறப்புமிக்கது. இந்த உறவை மேலும் வலுப்படுத்தும் விதமாக, திரிசூல் போர்க் கப்பல் இங்கு வந்துள்ளது' என்றார்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர், இந்தியாவின் நிதியுதவியின் கீழ் ஜான்ஜிபாரில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் விநியோகத் திட்டத்தை ஜெய்சங்கர் பார்வையிட்டார்.

தொடர்ந்து வெள்ளி, சனிக்கிழமை பல்வேறு நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்கிறார். அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்துப் பேசவிருக்கும் ஜெய்சங்கர், இந்திய-தான்சானியா வர்த்தக மாநாட்டையும் தொடங்கிவைக்கவுள்ளார்.

தார்-எஸ்-சலாமில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் சுவாமி விவேகானந்தரின் மார்பளவு சிலையை ஜெய்சங்கர் திறந்துவைக்கவுள்ளார் என்று வெளியுறவு அமைச்சக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.